# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.269/2018** **Date:04.04.2024**

**(P.W– 1)**

திரு.திருமலைசாமி த/பெ.ஆறுமுகம்

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. கிரையம் பெற்ற சொத்து குழந்தையப்பம், சுப்பிரமணியன், ஆராக்ககவுண்டர், சத்திகிரிசாமி, மாரப்பகவுண்டர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி 5 பேரும் சேர்ந்து மூன்றாம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றும், 3ம் பிரதிவாதியிடம் இருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால், சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்கும் சம்பந்தம் உள்ளது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், வங்கி கணக்கு அறிக்கையும், முன்தொகை கொடுத்தற்கான ரசீதும் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1ல் தாவா சொத்திற்கான எண், கிராமம் பெயர் எதுவும் இல்லை என்றால், சரிதான். சைட் எண் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் பிரதிவாதி திருவேங்கடத்திடம் பணம் கொடுத்தது போல் குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான்.

2. நான் சொல்வது போல் தாவா சொத்தை கிரையம் பெற முன் தொகைபெற்றதாக வாசா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். 3ம் பிரதிவாதி கட்டிடம் கட்டி கொடுக்கும் பொறியாளர் என்றால், சரியல்ல. இடம் கிரையம் செய்து கட்டிடம் கட்டி தருகிறார். நான் கிரையம் பெறும் போது பணத்தை 4ம் பிரதிவாதிக்கு தான் கொடுத்தேன் என்றால், சரிதான். வங்கி கணக்கில் 3ம் பிரதிாவாதி பெயருக்கு 3,06,750/– ரூபாய் தொகையை வரையோலையாகா கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். கிரையப்பத்திரித்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வங்கியில் உள்ளது. பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தின் பத்திரம் எனக்கு விரோதமாக உள்ளதால் தான் அந்த பத்திரத்தின் அசலையோ, சான்றிடட்ட நகலையோ தாக்ல

செய்யவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணப்படி 50,101/− ரூபாய் கொடுத்தள்து என் சொத்தில் நான் கட்டிடம் கட்டுவதற்காக 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்த முன்தொகை என்றால், சரியல்ல. கிரையப்பத்திரத்தில் மேற்படி தொகை கொடுத்தாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால், சரிதான். தனியாக குறிப்பிடவில்லை.

3. எஸ்டிமேட்டின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால், அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. எஸ்டிமேட் ஆவணத்தை யார் தாக்கல் செய்தார் என்றால், வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். என் பிராமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சர்டிபிகேட் ஆப் எஸ்டிமேட் என்ற ஆவணம் எது என்றால், பத்திரத்தை குறிப்பிட்டுள்ளேன். அந்த ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 15.09.2016 கிரைய ஆவணப்படி எத்தனை சதுர அடி கிரையம் பெற்றுள்ளேன் என்றால், 2044 சதுரடி ஆகும். மேற்படி தேதியில் தான் 4 ம் பிரதிவாதியும் 3 வது சைட்டின் கிழபுறத்தை கிரைப் பெற்றுள்ளார் என்றால், தெரியாது. பின்னிட்டு தெரிந்து கொண்டேன். மேற்கண்ட 15.09.2016 தேதியை 12.09.2016 என்று சாட்சி கூறுகிறார். 12.09.2016 தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. என்ன ஆவணம் என்றால், பத்திரம் ஆகும். நான் சொல்வது போல் 12.09.2016 தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்யில்லை என்றால், சரியல்ல. 12.09.2016 தேதியில் ஆவணம் உள்ளதாக என் பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன்.

4. என் பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து சரி என்பதால், தான் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 3 ம் எண்ணின் கிழபுற பகுதியை 1, 2 பிரதிவாதிகள் எனக்கு விற்பதாக ஒப்புக்கொண்டுள்ளதாக தான் எழுதி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். என் பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும், 3 ம்பிரதிவாதி விற்பணை செய்வதாக எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் கிரையம் பெற்ற தேதியில் தான், 3 ம் சைட்டின் கிழபுற பகுதியை 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு தகுந்த பிரயோஜனத்தின் பேரில் கிரையமும், சுவாதினமும் செய்து கொடுத்துள்ளார் என்றால், எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், 3 ம் சைட்டின் கிழபுற பகுதி 4 ம் பிரதிவாதி சுவாதினத்தில் இருப்பது தெரியும் என்றால், சரியல்ல.

5. 3ம் சைட்டின் கிழபுற பகுதி என் அனுபவத்தில் உள்ளது என்பதற்கான எழுத்து மூலமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் 3ம் சைட்டை சுற்றி காம்பவுண்ட் வால் போட்டுள்ளேன் என்றால், கிரையம் பெற்ற சொத்திற்கு மட்டும் போட்டுள்ளேன். 3ம் சைட்டை பொருத்து 3ம் பிரதிவாதியிடம் நான் கிரைய ஒப்பந்தம் பேசி உள்ளது என்பதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால், சரிதான். நான் அனுபவ சுவா்தினத்தில் உள்ளதாகவும், அதனை தடை செய்யகூடாது என்றும், வழக்கு போட்டுள்ளேன் என்றால், சரியல்ல. கிரையம் செய்து கொடுக்க சொல்லி போட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள் பிராதில் சைட் விலை பற்றியும், நான் கொடுத்த முன்தொகை பற்றியும், மீதி எவ்வளவு கொடுக்க வேண்டிய தொகை பற்றியும், எத்தனை காலத்தில் கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

6. கிரையப்பத்திரப்படி 2044 1/4 சதுரடி இடத்தின் மதிப்பு 3,06,750/– என்றால், சரிதான். சைட் 3ன் மொத்த விஸ்திரனம் 5,692.75 சதுரடி என்றால், சரிதான். எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகையாரிடம் கொடுத்தேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. கொடுத்துள்ளேன். எத்தனையாவது ஆவணமாக கொடுத்துள்ளேன் என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்தில் 4ம் பிரதிவாதி சைட் 3ல் 3048 1/2 சதுரடியும், 10ல் 2000 சதுரடியும், சைட் 1ல் 1375 சதுரடியும் ஆகிய மூன்றையும் 9 லட்சத்திற்கு கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். மேற்படி கிரையம் செய்தது எனக்கு தெரியாது. மேற்படி கிரையப்பத்திரத்தின் தேதி 15.09.2016 என்றும், பத்திர எண்.12049/2016 என்றால், சரிதான். என் பத்திர எண் 12039/2016 என்றால், சரிதான். மேற்படி என் பத்திரமும் மேற்கண்ட 12049/2016 பத்திரமும் ஒரே தேதியில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

7. என் பெயரில் பதிவுசெய்யபட்ட பத்திரமும், 4ம் பிரதிவாதி பத்திரமும், காலை 10 மணி முதல் 11 மணிக்குள் ஒரே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால், என்னுடைய பத்திரம் 10 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. 4ம் பிரதிவாதி பத்திரம் பதிவு செய்த நேரம் தெரியாது. இதுநாள் வரையில் 3ம் பிரதிவாதிக்கு சைட் 3ன் கிழபுற பகுதியை கிரையம் செய்து கொடுக்க கோரி அறிவிப்பு அனுப்பவில்லை என்றால், சரியல்ல. அனுப்பியுள்ளேன். 3ம் பிரதிவாதி பெயரில்

கிரையம் செய்துகொடுக்க வேண்டி இந்த வழக்கை தவிர வேறு வழக்கு தாக்கல் செய்யிவ்லலை என்றால், சரிதான். நான் சொல்வது போல் கிழபுற இடத்தை 1, 2 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுக்க ஒப்பு கொண்டிருப்பதாகவும் கிரையம் எழுதி கொடுக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் என் அனுபவ சுவாதினத்தை காண்பிக்க காட்சி இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்து 15.09.2016 ல் 4 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், அன்று முதல் இன்று வரை 4 ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் தாவா சொத்து உள்ளது என்றால், சரியல்ல.

8. நான் சொல்வது போல் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. பிரமாண வாக்குமூலத்திலோ, பிராதிலோ பிரச்சனை குறித்து இந்த தேதி, இந்த நேரம் என்று குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. சாட்சி பின்னிட்டு தேதி நேரம் குறித்து சொல்லவில்லை என்று கூறுகிறார். வழக்கிற்கு பின்னிட்டு சரவணன் பெருமாநல்லூர் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால், சரிதான். மேற்படி புகாரில் 4 ம் பிரதிவாதி சரவணன் தான் தன்னுடைய அனுபவ சுவாதினத்தை நான் தடை செய்வதாக கூறியுள்ளார் என்றால், சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது கூறியுள்ளார். நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபின் வு தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்த போது தான் 4 ம் பிரதிவாதி என் மீது புகார் கொடுத்தார் என்றால், சரியல்ல.

9. போலீஸ் என்னை விசாரணை செய்து வழக்கு முடியும் வரை சொத்திற்குள் என்னை செல்லக்கூடாது என்று சொன்னார்கள் என்றால், சரிதான். இரண்டு பேரையும் செல்லக்கூடாது என்று சொன்னார்கள். சைட் 3 ம் கிழபுற பகுதி தற்போது கம்பி வேலி போட்டு 4 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால், வழக்கு நிலுவையில் இருக்கும் போது கம்பி வேலி போட்டார். நான் வழக்கை தாக்கல் செய்து 4 ம் பிரதிவாதியின் அனுபவ சுவாதினத்தை தடை செய்ததால் தான் அவருடை இடத்தை பாதுகாக்க வேலி போட்டார் என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த தேதியிலோ, அதற்கு முன்போ, பின்போ எப்போது தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றால், சரியல்ல. 4 ம் பிரதிவாதியிடமிருந்து அவருடை சொத்தை சட்டத்திற்கு புறம்பாக அடைய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றும், 4 ம் பிரதிவாதியின் செலவு

தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல. இந்த வழக்கை தாக்கல்செய்ய எனக்கு எந்த விதமான முகாந்தரமோ, உரிமையோ இல்லை என்றால், சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.04.04 18:47:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.